குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 30-12-58 செவ்வாய் | இசை: 31

படி!

இசை: யதுகுலகாம்போதி — தாளம்: ஆதி

எடுப்பு:

நூலைப்படி! — சங்கத்தமிழ்
நூலைப்படி — முறைப்படி
நூலைப்படி

உடனெடுப்பு:

காலையிற்படி கடும்பகல் படி
மாலை, இரவு பொருள்படும் படி
நூலைப் படி!

அடிகள்:

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வ தெப்படி?
நூலைப் படி!

அறம்படி பொருளைப் படி
அப்படியே இன்பம் படி
இறந்த தமிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைப் படி!

அகப்பொருள் படி அதன்படி
புறப்பொருள் படி நல்லபடி
புகப் புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என்சொற்படி
நூலைப் படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக் கெல்லாம் தள்ளுபடி!
சேதி அப்படி! தெரிந்துபடி
தீமை வந்திடு மேமறுபடி
நூலைப் படி!

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி?
நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்காஇன் பம்மறுபடி
ஆகும்என்ற ஆன்றோர்சொற்படி
நூலைப் படி!

இசை

நூலைப்படி! — சங்கத்தமிழ்
கா. சரிகா. — கமபத,
நூலைப்படி — முறைப்படி
மபமககா, ரி க ச ரி.
நூலைப்படி
கா. ச ரி கா.

காலையிற்படி கடும்பகல்படி
கா ம. பபப கம. பபபப.
மாலை, இரவு பொருள்படும் படி
பதத. மபப. க ம க ரி . ச ரி,

புதுச்சேரி, தி. வ. ஆ கக௯அ௯ மார்கழி கரு

பொங்கற் புதுநாளில் உங்கள் தொண்டு என்ன?

★▭★

பொங்கற் புதுநாள் எங்கள் திருநாள் என்று சொல்லுகின்றான் தி. க. தொண்டன்.

அவ்வாறு சொல்லும் தகுதி அவனுக்குத் தான் உண்டு. மற்றவர்கட்கு இல்லை.

தி. க. தொண்டன் தான் உண்மைத் தமிழன்; அவனிடந்தான் தமிழத்தன்மை மிளிர்கின்றது. அவன்தான் கறைப்படுத்தப்பட்டு வரும் தமிழத் தன்மைகளைக் கறை நீக்கி நிலை நிறுத்த அல்லும் பகலும் பாடுபட்டு வருகின்றான்.

தமிழ் நாட்டைத் தமிழன் அடைய வேண்டும் என்று எண்ணுகின்றவன் வேறு எவன்? தமிழ்மொழி வாழவேண்டும், இந்தி தொலையவேண்டும் என்று உயிரைப் பணயம் வைத்துப் போரில் இறங்க வேறு எவன் முன் வருகின்றான்?

சாதி ஒழிய வேண்டும்; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று இறப்பு வரும் நேரத்தும், இன்னு நேரும் நேரத்தும் இயம்புவோன் தி. க. தொண்டனைவிட வேறு எவன் உள்ளான், எங்கே பார்க்கமுடிகின்றது?

பொங்கற் புதுநாள் தமிழர் திருநாள் அன்றோ! எனவே அது தி. க. தொண்டனுக்கே உரியதன்றோ!

தமிழர் திருநாளைச் சிறப்பிக்க வேண்டிய பொறுப்பு அவன் தலையில்தானே விழுந்துள்ளது.

தமிழர் திருநாளைத் தமிழன் சிறப்பிப்பது என்றால் என்ன? தமிழர் திருநாளைத் தமிழன் கொண்டாடுவதென்றால் என்ன? தமிழர் எண்ணத்தைத், தமிழர் செயல்களைத்; தமிழர் ஆசையைச் சிறப்புறச் செய்வதே அன்றோ?

இனித் தி. க. தோழர்களை, தி. க. தலைவர்களை நான் கேட்கின்றேன் பொங்கல் நாளில் என்னசெய்யப் போகின்றீர்கள் என்று.

நேற்றுத் தி. க. கொள்கைகளை ஆய்ந்தீர்கள். நேற்றுச் சொற்பெருக் காற்றினீர்கள் நேற்றுப் பாடினீர்கள். நாட்டுப்பாட்டு. பொங்கல் புதுநாளில் – உங்கள் திருநாளில் என்ன செய்யப்போகின்றீர்கள் சிறப்பாக?

மாவட்டத் தலைவர்கட்குக்கூறுகின்றேன்: ஒரு மாவட்டத்தில் – எங்கும் ஆயிரம் கழகக் கொடி ஏற்றப்படுதல் வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் – எங்கும் ஆயிரம் விடுதலை பரப்பப்படுதல் வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் – எங்கும் ஆயிரம் கழக நூற்கள் பரப்பப்படுதல் வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் எங்கும், ஆயிரம் புதிய உறுப்பினர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறு செய்க.

சோம்பல் என்னும் பள்ளத்தைத் தூர்க்க. உள்ளத்திற் காண்க தமிழர் திருநாள் தரும் பேரின்பத்தை.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி உக

இடம்: உறையூரை அடுத்த அண்டியூர்ச் சாலை.

காலம்: முதுமாலை.

உறுப்பினர்: கோப்பெருஞ்சோழன், சிறுபடை மறவர், படைத் தலைவன் உழுவைத்திறல், அமைச்சன்.

காட்சித் தலைப்பு:

குறிகெட்டவர்கள் எங்கே?

நிகழ்ச்சி: மூன்று தேர்கள், மூன்றே யானைகள், மூன்றேகுதிரைகள், முப்பதின்மரே காலாட்கள், ஆகிய சிறுபடை, உழுவைத் திறலின் தலைமையில் அண்டியூர்ச் சாலையை அடைகின்றது. முன்னணியிற் செல்லும் சோழன் அண்டியூர்ச் சாலையில் ஆரையும் காணவில்லை.

அரசன்: குறிகெட்டவர்கள் எங்கே? ஆரையும் காணோம்: அண்டியூர்ச்சாலைதான் காட்சியளிக்கின்றது. என்னை எதிர்க்கும் நோக்கத்தவர் ஏன் எதிர்க்கவில்லை? என் முடி பறிக்கும் நோக்கத்தவர் ஏன் முன்வரவில்லை?

செய்வது இன்னதென்று தெரியாது விழித்தார்களா? எண்ணத்தையே மாற்றிக்கொண்டு எங்கேயாவது ஓடிவிட்டார்களா? நெறிதவறினோர்க்கு உறுதி ஏது? எத்தனை ஆயிரம் தேர்கள் எத்தனை ஆயிரம் யானைகள்! எத்தனை ஆயிரம் குதிரைகள்! எத்தனை ஆயிரம் காலாட்கள்! பருஉத் தலையாரவர்கள் வேறு! அடி எடுத்து வைக்க வேண்டுமே என் அரண்மனை நோக்கி! முடி பறிப்பது எப்போது?

அமைச்சரே, படைத்தலைவரே, என்ன பொருள் இவர்கள் மறைவுக்கு?

அமைச்சன்: அவர்கள் மறைந்ததில் பொருள் இருக்கின்றது. அரசே, தங்கள் மைந்தர்களின் பெரும்படை மேல்நோக்கிச் சென்றிருக்கின்றது. அரண்மனைப் புறமாக அது திரும்பவேயில்லை. அடிச்சுவடு பாருங்கள்.

நம்மீது பற்றும் மதிப்புங் கொண்டுள்ள பாண்டிய மன்னனின் உள்ளத்தைக் கலைத்து, சோணாட்டின்மேல் பாண்டியனார் படையெடுக்கும்படி செய்வதே இளவரசர்களின் நோக்கமாயிருக்கலாம். பாண்டிய மன்னர் நம்மீது படை கொண்டு வருவதாக முன்னொரு பொய் சொன்னார்கள் அன்றோ. நாம் பாண்டிநாட்டின் மேல் படை கொண்டு வந்ததுபோல் காட்ட அங்குப் படையைத் திருப்பியும் இருக்கலாம் அன்றோ!

நேர்நின்று நம்மைவெல்லுவது அவர்கட்கு முடியாததொன்று! பெருங்கலகத்தைக் கிளப்பி அதற்கிடையில் காரியத்தைச் செப்பனிட்டுக் கொள்ள முடியும் என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடுகின்றார்கள்,

நிலைமை சிக்கலாகிவிடுகின்றது. மிக ஊன்றி எண்ணுதல் வேண்டும்.

அரசன்: நன்று கூறினீர். செய்வார்கள், ஆண்மை அற்றவர்கள் ஆதலின், புலிக்குப் பிறந்தவை முயல்களாயின! என் மக்கள் இழிவு நடையைமேற் கொண்டார்கள்!

அமைச்சரே, இவர்கள், என் ஆட்கள் போலப் பாண்டிய மன்னனிடம் சிலர் போய், நான் குற்றங்காட்டியதாகப் புளுகி, அதோ சோழனின் படையும் வருகின்றது என்று சொல்லும்படி செய்வார்கள். பாண்டியனார் நம்புவாரா? பாண்டியனார் நம்பினாலும் பிசிராந்தையார் நம்புவாரா? பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும் ஆதலால் அறிவுடை நம்பியார் படை எடுக்கவும் கூடும். அவ்வாறு படை எடுத்து வரட்டுமே! படை எடுத்து எங்கே வருவார்கள். யாரைக் காண்பார்கள்? என் மக்களின் படையைக் காண்பார்கள் எதிர்ப்பார்கள். மைந்தர் படை என்ன செய்யும் எதிர்க்குமோ? எதிர்க்கட்டுமே! எதிர்த்து மடியட்டுமே.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

கூகை

இது கூகம் என்ற வடசொல்லின் சிதைவென்று கூறி வருகின்றனர் வடவர். இது பொருந்தாப் புளுகாகும். கூகூஎன்று கத்தலால் கூகை என்றும் கூகம் என்றும் சொல்லப்படும். தூய தமிழ்க் காரணப்பெயர். இதுபோலவே கா கா என்று கத்தலால் காகா காக்கா காக்கை காகம் என்றெல்லாம் காரணப்பெயராக வழங்குவதையும் நோக்கவேண்டும்.

பேது

இது பேதம்என்ற வடசொற்சிதைவென்று வை. மு. கோ. கம்பராமாயண உரையில் கூறியுள்ளார். பேதைமை என்பதன் அடியாக அமைந்த பெயர்ச்சொல். வேற்றுமையைக் குறிக்கும்போதும் என்க. இது பேதைஎன்றும் பேதைமை உடைய ஐம்பாற் பொருளையும் குறிக்கவரும். வடமொழியில் பேதம் என்பதும் தமிழினின்று அவர்கள் எடுத்துக் கொண்டதேயாகும்.

மாணவன்

மாண் பெருமை. அகரச் சாரியையும் அன் ஆண்பால் இறுதிநிலையும் பெற்று மாணவன் ஆயிற்று. இதுவே மாணுக்கன் என்றும் வரும். மாண்+ஆக்கு+அன் பெருமையை உண்டாக்கிக்கொள்ளுபவன் என்று விரித்தும் பொருள் கொள்க. மாணவகன் என்றது வடசொல் என்றும் அதன் சிதைவுதான் மாணவன் என்றும் தமுக்கடிக்கின்றதாம் ஆக்காஷ் வாணிக் கூட்டம்.

அமைச்சன்: இளவரசர் படையானது பின் வாங்கி நம் நாட்டில் நுழையும் என்றால் என்ன ஆகும்?

அரசன்: துரத்திக் கொண்டு வருவார்களா? அஞ்சி ஓடுபவரை அழிப்பது அறமல்லவே.

அமைச்சரே, ஆவது ஆகட்டும், எது வரினும் தாங்கும் நம் தோள்! எது நேர்ந்தாலும் தாங்கும் நம் அறத்தின் திறம்.

நாம் இன்று அழுவது எது கருதி? பொதுவாக நம் நாட்டின் – சோழநாட்டின் புகழ் இகழாகின்றதே என்பது கருதித்தான்.

திரும்புவோம் அரண்மனை நோக்கி!

(போதல்)

★□★

தேவை

"குயில்" விற்பனையாளர் இல்லாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு;

அமைச்சர்
குயிலகம், புதுச்சேரி.

த ண் ட னை

"சித்தன்"

(ஆங்கிலச் சிறுகதையொன்றின் தழுவல்.)

குடிகளுக் கின்ப வாழ்வைக்
கொடுப்பதே கடனுய்க் கொண்டு
முடியுடை வேந்தன் முன்னம்
முறைசெய்தான்; அவன்தன் ஆட்சி
மிடியிலா தமைந்த தாலே
மேதினி மக்கள் எல்லாம்
கடிமலர்த் தேனுண் டின்பங்
கண்டிடும் வண்டை யொத்தார்!

மன்னவன் அவைக்க ளத்தே
மாண்புடைப் பல்லோர் உள்ளார்;
அன்னவர் தம்மில் பேச்சால்
அனைவர்க்கும் இன்பஞ் செய்யும்
நன்மனத் தொருவன் வாழ்ந்தான்;
நகைச்சுவை மன்னன் அன்னேன்!
கன்னலின் சாறே யந்தக்
களிமகன் வழங்கும் பேச்சு!

முரசறைந் தவையுங் கூடும்;
முடிமன்னன் அவைக்குச் செல்வான்;
அரசனே(டு) உடைவா ளைப்போல்,
அவனைப்பின் தொடர்வான் அந்தச்
சிரிப்பினுக் கரசன்! யானைத்
தேரொடும் மன்னர் அங்கே
வரின்,அவர் தம்மைக் கூட
வாய்ச்சொல்லால் மகிழ்விப் பானே!

அமைச்சர்,நாற் படையின் மேலோர்;
ஐம்பெருங் குழுவில் உள்ளோர்;
இமையிமைத் துயிரை வாங்கும்
இளநகைக் கூத்துப் பெண்டிர்;
சமைந்தநற் றமிழின் பத்தைத்
தரும்புல வோர்கள்; மற்றோர்;
அமைந்தமெய் காப்போர் எல்லாம்
அவன்பேச்சால் செயல்ம றப்பார்!

அரசனின் முன்னே ஓர்நாள்
அமைச்சர்தாம் வணங்கி "வேந்தே!
அரசியற் பணிசெய் வோரின்
அன்றாட அலுவல் எல்லாம்
வரவரக் குறைந்த தென்றார்"
வாள்வேந்தன் சினந்து, கண்கள்
எரியெழ நோக்கி, "யாரால்
இவ்விடர் விளைந்த" தென்றான்?

மன்ன!நம் அரச இல்லில்
வழக்கமாய் நிகழ்தொ ழில்கள்
குன்றிடச் செய்தோன் பேச்சிற்
குறும்பனும் – என்று சொல்லே
மென்றனர் அமைச்சர்! வேந்(து)ஓர்
மெய்காப்பான் தனைய ழைத்தே
"என்முன்அக் கூத்தன் தன்னை
இக்கணம் கொணர்க," என்றான்!

மெய்காப்பா னோடி, யந்த
வேடிக்கைக் காரன் தன்னைக்
கையொடும் அழைத்து வந்தான்;
காவலன் கண்டே, காய்ந்த
நெய்யிடைப் பண்ணி யம்போல்
நெடுஞ்சினத் தால்து டித்"துன்
செய்கைகள் எல்லை மீறும்
செய்தியை இன்ற றிந்தேன்!

தூக்கில்,உன் உடலை நாளைத்
தூக்குவர்; இதுவென் ஆணை!
நாய்க்கிடங் கொடுத்த தாலே
நமக்கிந்தத் தொல்லை" என்றான்!
வாக்கினல் பிறருள் ளம்,தன்
வழிபடச் செய்யுங் கூத்தன்,
"பாக்கள்தேர் மன்ன! சாமுன்
பகருமென் னுரைகேள் "என்றான்!

'சொல்லுக' என்றான் மன்னன்!
சொல்நய முடையான், "ஐயா!
கொல்லுவேன் என்றீர்! ஒத்துக்
கொள்ளுவேன்; உயிர்இ ழுக்க
நல்லதோர் வழியை நானே
நவில்வதற் கருள்க" வென்றான்!
"நல்லது; தந்தோம்; சொல்!நீ
நாடுமவ் வழியா(து)?" என்றே,

புதுமலர்த் தாரான் கேட்கப்
புத்தியில் மிக்கான் சொல்வான்!
"முதுமையாற் சாக வேண்டும்;
மூண்டஎன் விருப்பந் தானும்
இது"வென, நகைத்தான் மன்னன்!
இவன்நகைத் திறம்வி யந்தான்!
மதுரமாய்ப் பேசு வோர்தம்
வாக்கினில் மயங்கார் யாரே ?

சினவலும் செய்யாள்!

மதுரை, ம. ரா. கோமதிநாயகம்

அவளோ கட்டழகி! அவனோ ஆணழகன்! எதிர்பாராமல் இருவரும் ஒருநாள் எதிர்ப்பட்டனர். அவள் நோக்கினள்! அவனும் நோக்கினன். இருவரது பார்வையும் ஒரு சேரக் கலந்தது. இன்ப வெள்ளத்தில் அவர்தம் உள்ளம் எல்லையின்றி மகிழ்ந்தது. எவ்வளவு நேரம் இருவரும் அவ்வாறு எழுதிய சித்திரம்போல் நின்றார்களோ? காதல் வளர்ந்தது. களவும் நடந்தது!

இப்படி ஒரு நாள் இருநாள் அல்ல! பலநாள்! அவள் வழக்கப்படி அன்றும் வந்தாள். நீலச் சிற்றாடையும் அதில் அமைந்த பூக்கரையும மேலும் அவள் கோலத்தைக் கூட்டிக் காண்பித்தது.

அவளை அருகிழுத்தான். மெல்லத் தழுவினன். உச்சிமோந்தான். முல்லை மலர்க் கொத்தை அவள் தலையிலே சூட்டினன். விலை மதிக்க முடியாத செல்வமாய் அதை அவள் ஏற்றுக் கொண்டாள்.

கலகலவெனச் சிரிப்பொலி! பின் அதைத் தொடர்ந்து சலசலவென வளையொலி! பின் பல "இச்"சொலிகள்.

களவு முடிந்ததது. அவள் இல்லம் சென்றாள். கூந்தலில் முல்லை மணம்வீசிக் கொண்டிருந்தது. அவன் சூடிய மலரல்லவா? அதை விட்டெறிய மனம் வருமா?

கூந்தலிலே மலர்! அன்னை கண்டாள்! உணர்ந்தாள்! அவளிடம் (மகளிடம்) அதுபற்றி வினவலும் செய்யாள் சினவலும் செய்யாள்.

களவு ஒழுக்கம் நடைபெறுவதை அன்னை அறிந்துகொண்டாள் என்பதைத்தலைவி அறிந்தாள். இனி என்ன வருமோ? என்று எணணிப் பெரிதும் அஞ்சி நின்றாள். கூந்தலை முடித்தாள். ஆடையைத் திருத்தினள். அண்மையில் உள்ள கானகம்சென்று ஒளிந்தாள்!

தலைவி எங்கே? தோழி தேடினள்! கானகம் வந்தாள். நடந்ததென்ன என்று வினவினள்.

"மெல்லியல் தோழியே! ஆயன் மகன் முல்லை மலர் சூட்டினன். அதோடு வீடு வந்தேன். எண்ணெய் தேய்த்துக் கூந்தல்முடிக்க என் செவிலி என்னை அழைத்தாள். சென்றேன். கூந்தல் அவிழ்த்தாள். அவள் முன்னே அம்மலர் வீழ்ந்தது அன்னையும் தந்தையும் அது கண்டனர். ஆனால் அதுபற்றி அன்னை ஏது புதுமலர்? என்று என்னை ஒன்றும் கேட்கவில்லை! நெருப்பைக் கையிலே தொட்டவள் போல கையைப் பிசைந்து கொண்டு புறக்கடை போயினள். அவள்போன பின்பே நான் இங்கு வந்தேன்" என்செய்வேன்? என்றாள் தலைவி!

"ஓ! அப்படியா? நன்று! என் உயிரனைய தோழியே! அவன்தந்த முல்லை மலரினை நீசூடினாய்! நீ அவன்பால் காதல்கொண்டிருக்கிறாய் என்பதைப் பெற்றோரும் உணர்ந்தனர். அவனையே உனக்கு மணம் முடிக்க நேற்றுப் பேச்சு நிகழ்ந்தது. நீ அஞ்ச வேண்டாம்" என்றாள் தோழி!

இன்பம்! இன்பம்! எனத் தலைவியின் வாய் முணுமுணுத்தது!

(கருத்து: முல்லைக்கலி 115)

∞○○∞

க ம் ப ா ய ண ம்!

பழனி—திருமாறன்

வால்மீகிக் கள்ளனின் — வடமொழிக் காதையை
வண்ணத் தமிழினில்-வடித்திட்ட பெருமை
கல்வியிற் கொம்பனும்-கம்பனைச் சாரும்
காவியச் சுவையோ? — வாயெல்லாம் நாறும்!

புல்லேந்தும் ஆரியப் — பரம்பரைப் பேடி
புழுதிக் குப்பையில் புரண்டநா டோடி
வில்லேந்தும் வீரனும் — வெற்றிச் சூரனும்
விந்தை யிதுவன்றோ? — தெய்வப் பிறவியாம்!

பரத்தை அகலிகை — பத்தினி மாதாம்
பாதம் பட்டதும் — உருப்பெற் றாளாம்!
மரத்தின் பின்னே — மறைந்தே வேங்கையை
மாய்த்திட்ட நரியின் — மகிமைச் செயலாம்!

மெல்லிசை வீணையை — மீட்டிடும் வல்லோன்
மென்மலர் நெஞ்சம்-படைத்திட்ட நல்லோன்
நல்லிசை வாணன் — நம்முடை இனத்தோன்
நாடியின் துடிப்பென — நீதியைக் காத்தோன்,

இலங்கா புரியின் — மன்னவன் இராவணன்
இரக்கம் சிறிதும் — இல்லா அரக்கனும்!
பழிக்குப் பழிதான் — வாங்கிய வரிப்புலி
பண்பின் சிகரம் — என்பதைச் சீதையின்

உள்ளம் சொல்லிடும் — உயிருடன் இருந்தால்!
உலகம் போற்றிடும்-உண்மையை அறிந்தால்!
வெல்லம் இனிப்பாம் — வேம்போ கசப்பாம்
வம்பன் கம்பா — யணமோ புளிப்பாம்!

தில்லிக்கு
எச்சரிக்கை!

வானொலியை ஆக்கு!
ஆகாஷ்வாணியை நீக்கு!

வானொலியாம் தமிழ்நீக்கி ஆகாஷ் வாணி
வடசொல்லை அங்குவைத்தார்! தமிழர் நாட்டில்
தேனொலியாம் தமிழ்இருக்க வடக்கு நஞ்சைச்
செந்தமிழர் காதினிலே ஊற்றி னீரே
ஏனையா எனக்கேட்டார் விசுவ நாதர்
இதுதானே சரிஎன்றார் ஆள வந்தார்.
பூனைஅல்ல தமிழ்நாடு நெஞ்சம் அஞ்சாப்
புலிஎன்று காட்டுமட்டும் அவர்தி ருந்தார்.

இளவழகன் தமிழ்நாட்டான்; ஆகாஷ் வாணி
எனும்இழிவு தொலையுமட்டும் உண்ணேன் என்றான்;
உளஅழகை வெளிக்காட்டிச் சூளு ரைத்தே
உயர்திருச்சி வானொலியின் நிலையத் தின்முன்
எளிதாக நாட்டாரை எழுப்பி விட்டே
ஏதுமிலாத் தனியாள்போல் உட்கார்ந் துள்ளான்
இளவழகன் எண்ணமே தமிழர் எண்ணம்!
எச்சரிக்கை செய்கின்றேன் தில்லி யார்க்கே.

எழுவீர்!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்.

இந்திஎனும் இருள் அகல
இல்லமெலாம் நல்லின்பம்
வந்தமையத் தென்னுட்டீர்
எழுவீர்! – இன்றே நம்
செந்தமிழைக் காப்பதற்கே
எழுவீர்!

ஆடோடு மாடோட்டி
அந்நாளில் வந்தவர்கள்
ஓடும்படி நமைச்சொன்னூர்
எழுவீர்! – இன்றே அந்த
நாடோடிகள் வாலறுக்க
எழுவீர்!

வாய்மூடி ஊமைகளாய்
வாழ்வோமேல் நம்வாழ்வு
நாய்வாழ்வே ஆகுமன்ரு
எழுவீர்! – இன்றே தமிழ்த்
தாய்வாழ்வைக் காப்பதற்கே
எழுவீர்!

★□★

புன்முறுவல் பூத்திட்டாளே

வித்துவான். தெ. செயராமன், புதுவை.

இத்தனைநாள் எனைப்பிரிந்து கொண்டு வந்த(து)
என்னென்று விளம்பியவென் இல்லாள் நோக்கி
நித்திலத்துக் கொடியென்றேன்; நட்டு வைத்து
நீரூற்றி வளர்த்திடுவேன் கொடுங்கள் என்ருள்;
தத்தையென்றேன்; கொஞ்சுமொழி பேசுஞ் சற்றுத்
தாருங்கள் என்றுநின்ருள்; மயிலே! என்றேன்;
நித்தமதன் ஆட்டத்தில் நாட்டங் கொள்வேன்
நிலத்தினிலே விடுங்களெனத் தவித்து நின்ருள்;

குயிலென்றேன்; கவலையெலாம் தீரப் பாடும்
கொடுங்களதை யன்போடு காப்பே னென்ருள்;
பயிலாத மானென்றேன்; விட்டு விட்டால்
பாய்ந்தோடும் சற்றுமதை விடாதி ரென்ருள்;
வெயில்வண்ணப் புருவென்றேன்; எங்கே? எங்கே?
மிகவழகோ? மிகப்பெரிதோ? என்று கேட்டாள்,
கயற்கண்ணீ! அத்தனையும் நீயே யென்றேன்;
காரிகையாள் புன்முறுவல் பூத்திட் டாளே!

கண்ணையும் கருத்தையும்
கவரும் வகையில்

"குயில்"

பொங்கல் மலர்

கழகத் தலைவர்கள், தமிழகப்
பேராசிரியர்கள் ஆகியோரின்
எழுத்தோவியங்களைத் தாங்கித்
தைத்திங்கள் முதல் நாளன்று
வெளிவருகின்றது.

விலை 50 காசு

★ தனி இதழ் வேண்டுவோர் 7–1–59 க்குள் 58காசு அஞ்சற்றலைகள் அனுப்பி மலர்பெறுதல் வேண்டும்.

★ விற்பனையாளர்கள் தங்கள் தேவைக்குரிய இதழ்கட்கு கழிவுநீக்கி 7–1–59 க்குள் முன்பணமனுப்பிப் பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறோம்,

★ முன்பணம் அனுப்பாத விற்பனையாளருக்கு மலர் அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமைச்சர்.

தொல்புகழாளன்

திருச்சி, முதுகண்ணன்

நிலனீர் தீவளி வெளியெனும் பருப்பொருள்
தம்மிடை யுதவிய தாவில் பல்பொருள்
இடையரு தியலும் வடுவில் வையத்
திருட்குவை நீக்கிப் பொருட்குவை புலன்செய்
பீமிசை ஞாயிற்று வியன்கடற் புடவியில்
நிறையறி யாமையாம் நீளிரு ணீங்கப்
பகுத்தறி வெனுமோர் பாயொளி பரப்பி,
உலகிய லுண்மைக ளோவா துணர்த்தி,
மெய்மையின் வழுவிய பொய்மைசேர் புலவர்கள்
தம்முளத் தொளிநிறீஇத், தமிழெனு வுயிர்த்துப்,
பனிநெடு வரையின் பெருநிலை பசப்பினும்,
பொன்னும் பொருளுந் தன்னடிக் கிடப்பினும்,
இனித்த கூறினும், பனித்த மொழியினும்,
தன்னிலை திரியா மன்பே ருளத்தொடும்
மன்பதை யினைக்கூஉய் வாழ்வாங்கு வாழ்தல்
ஒப்ப முடிந்ததா முலகமக் கட்கெலாம்

ஆதலின்;

மக்களுள் வேற்றுமை மல்கநின் றவைதாம்
வேதா கமமோ மிருதியோ புராணமோ
சாத்திரக் குப்பையோ மூத்தவர் மொழிந்ததோ
ஆண்டவன் அருளோ அடியவர் நெறியோ
கவலைகொள் ளற்க! கண்மூடிப் பற்றும்
மூடக் கொள்கையும் முற்றும் விட்டிடுக!
உன்னுக! உணர்க! பின்ன ரொப்புக!
மக்க ளினமாம் வான்பயிர்க் களையாய்
நிற்பவை யனைத்தையும் நீக்குக! நொடிக்குள்
ஒருமை யுடையவள் உன்தமிழ்த் தாயவள்
அருமையோர்ந் திடுக! அவள்முன் னேற்றம்
உன்முன் னேற்றமஃ துறுதியாம் மறவேல்
என்றென் றுணர்த்திடும் ஒன்றுமொழி கொள்கை
புதுமை வித்திய புரட்சிப் புலவனைத், [யீன்
தமிழ்த்தா யீன்ற தலைமகன், அன்பியல்
தமிழ்வளம் பாடுந் தமிழர் தந்தை,
தமிழே பாரதி தாசன், பாரதி
தாசனே தமிழெனத் தமிழ்நில மேத்தும்
செந்நாப் புலவன். திருவிடச் செம்மல்,
புலவன் என்றசொல் பொருளுடைத் தாக
இயற்கை தந்த இருங்கவிப் புலவன்,
விடுதலை வீரன், மீப்புகழ் பாரதி
தாசனு மென்று சாற்றுமிவ் வுலகே;

அன்னவன்,

பாரதி தானோ? பாரதி தமக்குமேற்
பட்டவர் தமக்குமேற் பட்ட
தொல்புக ழாளனுச் சொல்லுதல் தகுமே.

<▭>

இருசொல் அலங்காரம்

வித்துவான், பா. முத்து, புதுச்சேரி.

இன்னிசை யாழினின் றெழுவதேன்?
இன்பப் பொங்கல்நாள் என்பதேன்?
தை வரலால்

கிழக்கிற் பரிதி முளைப்பதேன்?
கிழவர் பெரியார் உழைப்பதேன்?
கீழ்மை அகல

அணங்கின் அழகு மிகுவதேன்?
அருங்கவி நம்மனம் கவர்வதேன்?
அணி வகையால்

இரவில் இருள்கண் மறைப்பதேன்?
இழிகுலம் உயர்குலம் என்பதேன்?
மதியில்லாமல்

நரிகள் கிடையில் நுழைவதேன்?
நங்கை சலங்கை அணிவதேன்?
ஆட்டுக்கு

பாதைகள் பலஒன் றுவதேன்?
பதமும் பதமும் புணர்வதேன்?
சந்தியால்

வண்டு மலரை நாடலேன்?
கண்டவர் புதுவைக்கு வருவதேன்?
மதுவுண்ண

பூவை மக்கள் நுகர்வதேன்?
பூவையும் காளையும் இணைவதேன்?
மணத்துக்கு

எம் தலைவர்க் கீடிங்கு எவருமே இல்லே!

அணைக்கரை, டேப். தங்கராசன்

எம்தலைவர்க் கீடிங் கெவருமே இல்லே
எந்தநாடும் கண்டிராத இயற்கையின் பிள்ளை

சிந்தனையின் முடிவதிலே சிங்கம்போல் செல்வார்
சிக்கனமாய் வாழ்வதென்ற சித்தமே கொள்வார்
இந்துமதக் கொடுமைகளை எடுத்துமே சொல்வார்
எதிரில்வரும் பகைவர்களை எளிதினில் வெல்வார்!

எவரும் சொல்லாக் கருத்தைத் துணிவோடு
[சொன்னார்
இரும்பு திரையைக் கிழித்துநமை வாழச்சொன்னார்
தவறு செய்வோ ருக்குத் தயவுவையாரே
தயவு கருதியவர் தவறு செய்யாரே!

மதிப்பிழந்த நற்கருத்தைப் பதிய வைப்பார்
மருண்ட மக்களைத் திரண்டெழ வைப்பார்
எதற்கும் அஞ்சா தெதையும் சாதிப்பார்
இனம்பட்ட தீமையைக் காலால் மிதிப்பார்!

<★>

சனாதனகாந்தி!

—: கோனூர், தமிழ்நாவன். :—

சாதியைக் காத்தவர் காந்தி - வர்ண
தர்மம் வளர்த்தவர் காந்தி!
ஓதிடும் பார்ப்பனர் தம்மை — மிக
உச்சியில் வைத்தவர் காந்தி!

சாதிக்கு ஓவ்வொரு நீதி - தனைச்
சாற்றிடும் வேதங்கள் ஓதி
மேதினி தன்னிலே வேதம் - மிக
மேலோங்க வேண்டிய மிகநீதம்

என்று பலமுறை சொல்லி — மிகப்
புராண மதச்சேற்றை அள்ளி
என்றும் குடித்தவர் காந்தி - இவர்
பேசியதோ பொதுச் சாந்தி!

நான்கு பிறப்புக்கும் கிழாய்! இந்த
நாட்டிலே சூத்திரர் வந்தார்!
மேன்மைப் பிறப்பினைக் கண்டு - தாழ்ந்து
வாழ்வதே அன்னவர் தொண்டு!

என்றே அறிவுரை தந்து - சாதி
பேதமே நீங்குக என்று
குன்றென பேதம் வளர்த்தார் - சாதி
குன்றிட வில்லை தழைத்தார்!

இந்து மதத்தினைக் காத்தார்! - அதில்
எங்கும் சனாதனம் சேர்த்தார்!
தொந்திப் புரோகிதர்ச் சேர்த்தார்! - பின்னும்
தேசியப் போர்வையைப் போர்த்தார்!

தமிழருக் கேபெருந் தீங்கு - வந்து
சேர்ந்தது காந்தியால் ஈங்கு!
அமிழ்ந்திருந் தோம்தலை தூக்கிச் — சூழும்
அல்லலை நீக்குவோம் தாக்கு!

என்ன தவறுண்டு கூறீர் — காந்திக்
கிங்கென்ன வேலையாம் தேரீர்!
அன்னவர் தன்சிலை நீக்கித் - தூய்மை
ஆக்குவோ குற்றங்கள் போக்கி!

குயில் வளர்ச்சிக்கு...

திருச்சித் தோழர்களான பா. தங்கவேல், நா. இராமலிங்கம், கோ. இராமச்சந்திரன் ஆகியோர் ருபாய் மூன்று அனுப்பியுள்ளார்கள். வரப்பெற்ரேம். நன்றி!

—அமைச்சர்.

நாயும், புராணமும்

(வித்துவான் தா. குருசாமி)

'நாய்துப் பறிவதை நம்பு மிவர்கள்
புராணக் கதையை நம்பாத தேனோ?'

கூடல் நகரின் இலக்கிய விழாவில்
இந்தியத் தமிழர் வினவினர் இப்படி!
கொட்டை எழுத்தில் தலைப்பை ஈந்தே
ஆரிய ரேடு பூரிப் படைந்தது!

நாய்துப் பறிதல் உண்மை; காரணம்?
நுண்ணிதின் நுகரு முணர்வே என்போம்!
அறிவியல் முறையோ டாய்ந்து நோக்கின்
மோப்ப உணர்வு நாய்க்கே மிகுதியாம்!
வரலா றென்னும் உயிரே இல்லாப்
புராணக் கதையைப் புகுந்து நோக்கி
அறிவும் உணர்வுங் கொண்டே ஆயின்
இந்திரன் சந்திரன் அருந்ததி யர்களும்
தயிர்க்கடல் பாற்கடல் பன்முகக் கடவுளர்
கிழ்மேல் ஈரெழு பதினன் குலகும்
அறிவிய லாய்வில் வறிதாய் முடிந்தன!
முடிந்த முடிபின் முடிச்சை அவிழ்த்து
நாயைக் காட்டி 'நம்புக' என்பது
வழிப்பறி செய்யுக் திருடர் செயலாம்!
'கணவன் யானே! இணங்குவாய்'
[என்பதாம்!
விருப்ப மற்ற போக்கிற் செல்லும்
சிலம்புச் செல்வர் இதனுல்
இலக்கியத் தமிழும் தெரியா தாரே!

இந்திக்கு

இரா. அரங்கனுதன், நயனூர்மண்டபம்.

நேற்றுதித்து வந்தவளே நேர்மையிலார்
[தந்தலைமேல்
ஏற்றித் தலைவணங்கி எப்போதும்—போற்றுமொரு
மந்தியே எங்களுயிர் மாத்தமிழ்க் கீடில்லா
இந்தியே எங்குவந்தா யிங்கு?

பார்புகழு மெங்களுயிர்ப் பைந்தமிழுக் கோயதிராய்?
ஆரிங் குனைத்தான் அழைத்திட்டார் - ஊர்மேயும்
இந்திகா யேவுனக் கெம்நட்டி லூற்றதுணை
செந்தமிழர் தங்காற் செருப்பு.

<O>

ஆரியத் தாக்குதல்

மதுரை இ. ப. நடராசன்

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னால் சமயம் பற்றி மக்கள் கொள்கை ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்பதே. ஆனால் கி பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் ஆரிய இனம் புகுந்த பிறகு அவர்கள் கொண்ட வைதீகச் சமயக் கருத்துக்கள் நம் தமிழ்ச் சமயக் கருத்துக்களுக்கு முற்றும் முரண் பட்டவை. ஆதலால் அச்சமயம் நம் தமிழ்ச் சமயத்துடன் கலந்து மரத்தினுள்ளிருந்து அரிக்கும் நீர்க் கறையான் போன்று தமிழ்ச் சமயக் கருத்துக்கள் தெரியவொண்ணாவாறு உட்புகுந்து. கெடுக்கலாயிற்று.

எடுத்துக்காட்டாக மக்களை நான்கு வருணமாகப் பகுத்து அவ்வேற்றுமையிலே வளர்ந்து கொழுத்துத் திரண்டது வட வைதிகம். அதனாற்றான் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்" என்று திருநாவுக்கரசு போன்ற பலசமய 'அரசு'கள் பாடும் அளவுக்கு வடவர் தம் சமயக்கோட்பாடுகள், நம் சமயத்தில் நெடிது வளர்ந்து பெருகலாயிற்று!

இதற்கெல்லாம் தமிழர் ஏமாந்த தன்மையே காரணம். தமிழர் ஏமாந்த காரணம் ஏமாற்றும் கலையில் தேறிய நேரடித் தாக்குதல் அறியா இராமர் (ஆரியக்)கூட்டங்கள் தமிழரைஎமாற்றும் அளவுக்குச் சூழ்நிலையை அமைத்துக்கொண்டன.

அதாவது காணமுடியா வீட்டுலகையும், அதன் செலவுக்கு வழி முறைகளும், வேள்வியறியாத் தமிழ் மக்களுக்கு வேள்வி முறையும், தெய்வலோகத்திலே உறைவதாகக் கூறப்படும் தலைவன் தலைவியர்க்குரிய வாழ்க்கை வரலாறுகளும், பாரம்பரியமும் தான்நேரில் இருந்து பார்த்ததுபோன்றும்–அதனை உணர்த்தும் வரலாற்றினைக் கற்றது போன்றும்–கூறிக் கள்ளமறியாத தமிழனிடம் தம் சமயக் கருத்தைப் புகுத்தி மக்களைப் பாகுபடுத்தி மாறுபாட்டுடன் விளங்கும்படி செய்து விட்டனர்.

எடுத்துக் காட்டாக நம் தமிழர் திருமண விழா பண்டை நாளில் மூன்று நாள் நிகழ்ந்து வந்தது அப்போது களவிற் புணர்ந்து கூடி இன்புற்று மகிழ்ந்த தலைமக்கள் அம்மூன்று நாளும் கூட்டம் பெறார். அவ்வாறு தலைமக்களைக் கூடி இன்புறா வண்ணம் இடையிட்டு வைத்த காரணம் தலைவன் தலைவியது கூட்டம் இனிது சிறக்க வேண்டியே—பிரிவே காதலை வளர்க்கும் என்னும் இயற்கையை எண்ணியே கூட்டத்தை நான்காம் நாள் நிகழ்த்துவித்தனர்.

இவ்வாறு இயல்பாக நிகழ்ந்து வந்த மூன்று நாள் திருமண விழாவுக்குத் "தொல்காப்பியக் கற்பியல்" சூத்திரம் மூலமாகக் காரணம் கற்பிக்கப் புகுந்தனர் நச்சினார்க்கினியர்.

நச்சினார்க்கினியர் வடவர் – தமிழ் நாட்டுக்குப் புதியவர் ஆதலின் தமிழர் தம் கொள்கையும், பண்பாடும் தமிழர் தம் கற்பு நெறியும் அறியாத காரணத்தால் 'தண்டமிழ் நெறியில் தணல் கொட்டியது போன்று கூறுகிறார். கேளுங்கள்! "முதல்நாள் தண்கதிர்ச் செல்வர்க்கும் இடைநாள் கந்தருவர்க்கும் பின்னாள் அங்கியங்கடவுட்கும் அளித்து நான்காம் நாள் அங்கியங்கடவுள் எனக்கு நின்னையளிப்ப யான் நுகர வேண்டியது" என்று கூறுகிறார்.

தமிழ் மனம் படைத்த தண்டமிழ் மக்களே! சற்றே எண்ணிப் பாருங்கள். கடிதில் விளங்கும் 'நச்சினார்' இட்ட 'நஞ்சு'. தமிழ் மங்கையர்க்கே தனிப் பெருஞ்சிறப்பாகஅமைந்த சிறந்த கற்பொழுக்கத்தை 'ஆரிய'த் திரைபோட்டு மூடிச் சிதைக்க எண்ணுகிறார். தமிழர் கற்பை வடவர் கற்போடு ஒற்றுமைப் படுத்தப் பார்க்கிறார். தமிழர் கற்போடு வடவர் கற்புக்கும் உள்ள வேற்றுமையைச் சிறிது பாருங்கள்.

ஒருத்திக்கு ஒருவன் என்னும் தமிழர் கற்பு எங்கே? ஒருத்திக்கு – திரௌபதைபோன்று – ஐவரைக் கொள்ளலாம் என்னும் வடவர் கற்பு எங்கே? இன்னும் கன்னியிலே குழந்தைபெற்று கலங்கிய நீர்ப்பெருக்கிலே அக்குழந்தையை எறிந்து பத்தினி வேடம் கலையாவாறு காத்துப்பின்னும் மணமுடித்து மானம் இன்றி உயிர் வாழ்ந்த வடவர் கற்பு எங்கே? கணவனுக்காகவே உயிர் வாழ்ந்து அவன் இறந்து பட்டதும் உடன் இறந்துபட்ட தமிழர் கற்பு எங்கே? விரிப்பின் வேறுபாடு மிகப் பெருகும்!

இவ்வாறெல்லாம் தமிழர் தம் கோட்பாடுகளுக்கும் பெருமைக்குரிய மூலத்திற்கும் உரையோடு உரையாக மாசு கற்பித்தனர் வந்தேறிகளான ஆரியர்.

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி

தொல்காப்பியரைத் திரணதூமாக்கினியாக்கிய நச்சினார்க்கினியர், நிலந்தருதிருவிற் பாண்டியன் எனப் பொருள் கூறவேண்டிய இடத்தில் நெடுமாலைக் கூறி அதன் மூலம் கீதையைப் புகுத்திய நச்சினார்க்கினியர், களவு மணத்தைக் கூற வேண்டிய இடத்தில் காந்தருவ மணத்தைக் கூறிய நச்சினார்க்கினியர், நல்லாசிரியர் என்ற சொல்லுக்கு அந்தணர் என்று பொருள்கூறிய நச்சினார்க்கினியர், வில்லாற்றலிலும் வேலாற்றலிலும் சிறந்த உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் நல்லியக்கோடனைக் கோழைபெனக் கொள்ளக் கதைகட்டிக் கனவு கூறிய நச்சினார்க்கினியர், தொன்றுதொட்டுத் தமிழகத்தைக் காத்தோம்பி வந்த சோழப்பேரரசர் குலத்தை இராமன்குடியில் தோன்றியதெனக்கூறிய நச்சினார்க்கினியர், ஓம்ப என்ற சொல்லுக்கு விருந்தோம்பலைவிடுத்து செந்தீஓம்புதல் என்று பொருள் கூறிய நச்சினார்க்கினியர் வேள்வியைப் பற்றியும், விரதத்தைப் பற்றுயும், தமது உரையில் வலிந்து புகுத்தாமல் இருந்துவிடுவாரா? அவ்வாறு புகுத்தாமலிருக்க அவரது தொண்டுள்ளம் ஒருப்படுமா? எனவே விரதத்தைப்பற்றியும் வேள்வியைப் பற்றியும் எங்ஙனம் புகுத்தியுள்ளார். என்பதைப்பற்றி இக்கட்டுரையில் ஒரு சிறிது காணுவோம்.

வான வெளியில் வட்டமிட்டு நிற்கும் பருந்து, முற்றத்துப் பரப்பில் மேய்ந்துதிரியும் கோழிக் குஞ்சுகளில் ஒன்றைக் கால் இடுக்குகளில் கௌவித் தூக்க முற்படுகின்ற பொழுது, தாய்க்கோழி உந்தி எழுந்து பருந்தைக்கொத்தி விரட்டுகின்ற துணிவையும், குட்டிபோட்டுக்கூட இருத்திப்பாலூட்டிநிற்கும் பூனை, அருகில் வருவோரைச் சீறிப்பாய்ந்து சினந்து துரத்துவதையும், நேரில் காண்போரால் தாம் வியந்து புகழ்ந்து பாராட்ட முடியும். தம் குஞ்சுகட்கும் குட்டிகட்கும் அழிவு நேர்கின்றபொழுது, திறனும் தெம்பும் உறனும் ஊக்கமும் அவைகளின் நாடி நரம்புகளில் நொடிப்பொழுதில் பரவி பகையை ஓட்டி விரட்டும் துணிவைக் காண்கின்றோம்.

ஐயறிவுயிரே இவ்வாறு சீற்றமுற்றுப் பொங்கி எழுந்து பகைவரை அழிக்க முற்படுகிறதெனில் ஆறறிவுயிர் வாளா விருக்குமா?

கணவனைக் கொன்றதுமன்றிக் கள்வன் எனக் கூறக்கேட்டாள் கண்ணகி. சினத்தீபற்றி நிற்கப் பொங்கி எழுந்தாள்; மங்கி மறைந்தது பாண்டியன் ஆட்சி. அவளை மாபெரும் பத்தினியென்றும், திருமா பத்தினியென்றும் தமிழ் உலகம் போற்றுகிறது. புகழ்கிறது.

செஞ்சொல்லும் உள்ளத் தூய்மையுமே அணியாய்ப்பெற்ற இன்தமிழ்த் துறவியாம் இளங்கோவடிகள் கண்ணகிக்குச் சொற்கோயில் எடுத்தார். அடிகளில் அண்ணனும் சாலப்பெருமை வாய்ந்தவனுமாகிய சேரன் செங்குட்டுவன் கற்கோயில் கொள்ள முற்பட்டான் – கற்புக்கடம்பூண்ட பொற்புடைச் செல்விக்கு.

வாளும், குடையும் வடதிசைப் பெயர்ந்தன. செங்குட்டுவன் சினந்தெழுந்து செருமுகம்நோக்கிச் சென்றான். காவா நாவிற் கனகனையும் விசயனையும் அகப்படுத்தினான். மலையிற்பெரிய இமயத்தில் வில் பொறித்தான்; வடிவமைக்கக் கல்லெடுத்தான். இழிமொழி பலபேசி ஏசிய கனக விசயர் தம் தலையிற் கல்லேற்றப்பட்டது; கங்கையில் நீராட்டப்பட்டது. துலக்கித் தூய்மைப்படுத்தும் ஆற்றல் கங்கைநீருக்கு இன்மையறிந்த குட்டுவன் கல்லை மறுமுறையும் காவிரியில் நீராட்டினான். நல்லதொருநாளில் தென் தமிழ்ப் பாவைக்கும் படிமம் அமைத்துப் பரவி வழிபட்டான்.

யாவரும் அறிந்த வரலாறே எனினும் ஈண்டு எடுத்தியம்பும் நிலையில் உள்ளேன்.

காதற் கணவனும் மனைவியும் பிரிந்துவாழாமல் என்றுமே ஒன்றுபட்டிருக்க முடியுமா? சுற்றுப்புறம் சமுதாயம் ஆகிய இவற்றை ஓவ்வொரு குடியும் தழுவி வாழவேண்டுமல்லவா. எனவே காதற் கணவன் மனைவியரிடத்துப் பிரிவு நிகழ்வது இயல்பெனக் கொள்க.

அரசியற் காரணங்களுக்காகவும், பொருளீட்டுதல் காரணமாகவும் பகை காரணமாகவும் ஆகிய இம் முறையில் பிரிவு பலதிறப்படும்.

''மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே''
(தொல். அகத் - 28)

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

''முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகைநிலத்திடத்தும் படிமம் அமைப்பதுகாரண மாகவும், மக்கள் முறைதவறி நடந்து பிறர்க்குத் துன்பமும் தொல்லையும் தந்து நிற்கின்ற வழி அவர் தம்மைத் திருத்துதல் காரணமாகவும் ஒள்ளிய பொருள் தேடுதல் காரணமாகவும் பிரிவு நிகழும்'' என்பது இச் சூத்திரத்தின் பொருள்.

இவற்றுள் சேரன் செங்குட்டுவன் பிரிவுபடிமம் அமைத்தல் காரணமாக ஏற்படும் பிரிவினுள் அடங்கும்.

படிமை என்ற சொல் வடிவு, விரதம், தவ வேடம் முதலிய பலபொருள் குறிக்கும் ஒரு சொல். சூத்திரத்தில் உள்ள படிமைய என்ற சொல்லுக்கு ''தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்து அமைத்த தேவர்மேல் வந்தது'' என்று இளம்பூரணர் விளக்கம் கூறி, மேலும் ''சேரன் செங்குட்டுவனர் கண்ணகியைக் கடவுண் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவு சிலப்பதிகாரத்திற் கண்டு கொள்க'' என்று கூறியுள்ளார்.

ஆனல் நச்சினர்க்கினியர் இச் சூத்திரத்திற்கு

''தனக்கு உட்பட்டநாட்டிடத்து முறை பிறழ்ந்த வழி, அவ்வாறு பிழையாது ஆக்கம்பெறக் காத்தலை விரும்பிப் பிரியும் பிரிவும், அந்தணர் அரசர் ஒழிந்த வணிகர் தமக்கு விரதங்களையுடையவாக வேத நூலிற்கூறிய ஒள்ளிய பொருள் தேடி முடியும்படி பிரிதலும் பிரிவு'' என்றுகூறி, சூத்திர உரையையே மாற்றித் தமக்கும் தமது வேதத்தைப் புகுத்துவதற் கும் ஏற்றமுறையில் பொருள் கூறியுள்ளார்.

இளம்பூரணர் கருத்துப்படி தாம் பொருள் கண் டால் இச்சூத்திரத்திரத்திற்கு இலக்கியமாகச் சிலப் பதிகாரத்தை எடுத்துக்காட்ட நேரிடும் எனக் கருதிய நச்சினர்க்கினியர் ஒரே கல்லில் இரு மாங் கனிகட்குக் குறிவைப்பதுபோல் இவ்வாறு சூத்திரப் பொருளை மாற்றியதால் தமது சாதிக் கருத்தைப் புகுத்தியதுடன் ஒரு பழந்தமிழ் இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாகத் திகழும் இந்த எடுத்துக் காட்டை மறைக்கவும் முயன்று அதில் வெற்றியும் கண்டிருக்கிறர்.

மிக அசைக்கமுடியாத சிலப்பதிகார எடுத்துக் காட்டு ஒன்று இருக்கும்பொழுது அதை விடுத்து மறைத்துப், படிமம் என்பதற்கு விரதம் எனப் பொருள் கூறி உரையெழுதிய நச்சினர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

''ஒண் பொருள் முடியவும் பிரிவே'' என்பது சூத்திரத்தில் உள்ள கடைசித் தொடர். ஒள்ளிய பொருள் தேடுதல் காரணமாக ஏற்படும் பிரிவு என்று கொள்ளலாம். ஆயின் நச்சினர்க்கினியரோ ''வேத நூலிற் கூறிய ஒள்ளிய பொருள்தேடி முடியும் படி பிரிதலும் பிரிவு'' என்று உரை வகுக்கிறர்.

சிறிதும் வேதத்திற்குத் தொடர்பில்லாத இந்த இடத்து வேதத்தைத் தமது உரையில் வலிந்து புகுத்தி உரையெழுதிய நச்சினர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

''பிராமணர்களின் தமிழ்வெறுப்பு, தமிழ்மொழி குன்றுதற்கும், தமிழ் நூல்கள் பலவற்றின் அழிவுக் கும் ஏதுவாயிருந்தது. பிராமணர் தாம் அழிக்க முடியாத நூல்களைச் சிதைவு படுத்தினர். வெள்ளத் தாலும் நெருப்பாலும் நேர்ந்த கொள்ளையில் இது மேலானது, தமிழ்நூல்களைஎடுத்து சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துப் பல கேடு செய்திருக்கின்றனர். பிழையான வழிகாட்டியிலும் வழிகாட்டியில்லாம லிருப்பது நன்று'' என கோவர் (Gover) என்னும் ஆசிரியர் கூறுவதாக ''தமிழர் சரித்திரம்'' என்னும் தமது நூலில் ந. சி. கந்தையாபிள்ளையவர்கள் குறிப் பிடுகிறர். (தமிழர் சரித்திரம் பக். 221-222)

மேற்கண்ட இப் பொருளுரையுடன் நச்சினர்க் கினியரின் உரைப்போக்கை ஒருங்கு வைத்து ஒப்பு நோக்கி உண்மை கண்டு தெளிக.

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0-15 (பதினைந்து காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

சென்ற இதழ்த் தொடர்ச்சி:-

வள்ளுவருக்கு வைணவப் போர்வையா?

வித்துவான். மு. முனிசாமி, புதுவை.

இயேசுநாதர் மலைமேல் செய்த உபதேசமே திருக்குறள். ஆகவே, திருவள்ளுவர் கிறித்துவரே என்பர் பிறமதத்தாரை அஞ்ஞானிகள் என்று கூசாது பேசும் கிறித்துவர்கள்.

இப்படிப்பட்ட வாதப்பிரதிவாதங்கள் பல நிகழ்ந்து விட்டன. அவையாவும் ஆராய்ச்சியாளரின் அறிவு-திறமை, தர்க்க ஞானம், திருக்குறளில் தங்களுக்குள்ள ஆழ்ந்த பயிற்சி இவற்றைக் காட்டினவேயொழிய உண்மையை முற்றும் எடுத்துரைப்பனவாயில்லை. ஆகவே அந்த ஆராய்ச்சி நாளாவட்டத்தில் மட்டுப்படுவதாயிற்று.

இஞ்ஞான்று, அது மெதுவாக வெளிவந்திருப்பதைக் காணும்போது தமிழ்நாட்டின் முன்னேற்றங் கருதி உழைப்போர் நெஞ்சம் புண்படத்தான் செய்யும்.

இத்தகைய சமய ஆராய்ச்சி பத்தாம் பசலித் தன்மை வாய்ந்தது. தற்கால உலகிற்குத் தேவையற்றது. மூடப்பட்டசாக்கடையை மீண்டும் திறப்பது போன்றது. திருவள்ளுவர் வைணவர் அல்லர், சைவர் தாம், சமணர்தாம், பௌத்தர்தாம் என்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடக் கலைக்கதிர் முன் வந்துவிடும் அது. பலருக்கு மனக்கசப்பை ஏற்படுத்தும். இதனால் கலைக்கதிர் தன் குறிக்கோளினின்றும் வழுவி விடும். அறிவியற் கலையைப் பரப்ப வந்த கலைக்கதிர் சமயத்தொண்டுசெய்யும் சாதாரண இதழாக மாறிவிடும். இந்தநிலை அதற்கு வரக்கூடாதென்பதே என்போன்ற இளைஞர்களின் விருப்பம்.

இனித் திருவள்ளுவர் வைணவர் என்பதற்கு நாயுடு அவர்கள் எடுத்துக் காட்டிய காரணங்களை ஒவ்வொன்ருக ஆராய்வோம்.

1. பகவன் என்ற சொல்லிற்குப் பலபொருள் உள. அது சிறப்பாக மகாவிஷ்ணுவையே குறிக்கும். ஆகையால், திருவள்ளுவர் வைணவர் என்கிருர்.

நன்னூல் சொல்லதிகாரத்திற்குக் கடவுள் வணக்கம் சொல்லப்புகுந்த பவணந்தியார் "முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதனடி தொழுதறைகுவன் சொல்லே" என்கிருர். இதில்வந்துள்ள "அச்சுதன்" என்றசொல் இஞ்ஞான்று திருமாலைக் குறிக்கும் என்பது சிறுவர்கட்கும் தெரியும். மேலும் "அச்சுதா அமரரேறே ஆயர்தங் கொழுந்தே" என்று ஸ்ரீமந் நாராயணன் அடியார்கள் பாடியிருக்கின்றனர். இத்தகைய, வெளிப்படையாகத் திருமாலைக் குறிக்கும் அச்சுதன் என்ற சொல்லைப் பவணந்தியார் எடுத்தாண்டு அவனுடைய தாளை வணங்கிச் சொல்லதிகாரத்தைச் சொல்லுவேன் என்றபோதிலும், பவணந்தியாரை வைணவர் என்று அறிவுடை உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் அச்சுதன் என்றசொல் பவணந்தியார் காலத்தில் பல கடவுளர்க்கும் பொதுச் சொல்லாய் இருந்தது. ஆகவே, பகவன் என்றசொல் எல்லாச் சமயக் கடவுளரையும் குறிக்கும் பொதுக் சொல்லாதலால் அதை எடுத்தாண்ட திருவள்ளுவரை வைணவர் என்று எங்ஙனம் துணிய முடியும்?

2. "அறவாழி அந்தணன்" என்னும் திருக்குறளுக்கு உரையாசிரியர் அறவாழி என்பதற்கு அறக்கடல் என்று கூறித் "தரும சக்கரம் என்று கூறுவாரும் உளர்" என்ருர். பின்னர் வந்த ஆராய்ச்சியாளர் தரும சக்கரம் ஏந்தியவன் புத்தன் என்ருர். அஃது எப்படியாயினும் புத்தர் திருவுருவத்தையும் மகாவிஷ்ணுவின் திருவுருவத்தையும் நேரில் காண்பவர்களே சொல்லட்டும். அவர்கள் புத்தர் கையில் சக்கரம் உளதென்று சொல்லார். எனவே, அறவாழி அந்தணன் என்பது மகாவிஷ்ணுவையே குறிக்கும். நம்மாழ்வாரும் இக்கருத்துக் கொணடே அறஆழிப் படை அந்தணனை" என அருளிச் செய்திருத்தல் காண்க! என்று நாயுடு அவர்கள் விளக்குகிருர்கள்.

நம்முடைய பண்டைய உரையாசிரியர்கள் ஒரு சொல்லுக்கோ அல்லது ஒரு தொட.ருக்கோ தங்கள் கருத்துப்படி பொருள் கூறி "இப்படிக் கூறுவாருமுளர்" என்ருல் அங்ஙனம் பொருள் கூறுதல் அவர்க்கு அத்துணை உடன் பாடில்லை என்பது தானே கருத்து. அங்ஙனம் பொருள் கூறுதலும் பொருந்தும் என்ருல், "அப்படிக் கூறினும் அமையும்" என்று தங்கள் உடன்பாட்டைத் தெரிவித்துச் செல்வர். இக்கருத்தைத் திரு. நாயுடு அவர்களே தம்முடைய கட்டுரையில் ஒப்புக் கொண்டிருக்கிருர். "உரைப்பாருமுளர்என்றுபிறர்மேல்வைத்துக்கூறிய

வர்'' என்ற தொடர் அவர் கட்டுரையில் காணப் படுவதால், ''உரைப்பாருமுளர்'' என்பது உரை யாசிரியருடைய சொந்தக் கருத்தல்ல என்பதை நாம் அறியலாம்.

ஆகவே, அறவாழி என்பதற்குப் பரிமேலழகர் தரும சக்கரம் என்ற பொருளை நேர்வழியில் எடுத் தாளாததினால் அந்தப்பொருள் அவர்க்கு உடன் பாடன்று என்பது போதரும். மேலும் அறஆழி என்பதற்குத் தரும சக்கரம் என்றபொருள் உறுதி யாக இருந்திருக்குமானால், தூய வைணவராகிய பரிமேலழகர் சைவம் என்றசொல்லை உபயோகித்து இருக்கமாட்டார் என்று கருதப்படும் பரிமேலழகர் கட்டாயம் அப்பொருளை ''என்று கூறுவாருமுளர்'' என்று பிறர்மேல் வைத்து ஓதியிருக்கமாட்டார். பரிமேலழகருக்கே உடன்பாடில்லாத பொருளைக் கொண்டு திருவள்ளுவர் வைணவரே என்று முடிவு கட்டுவது அறிவிற்குப் பொருந்துவதாயில்லை.

3. ''பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்'' என்ற திருக்குறளுக்கு உரையாசிரியர் ''அற்றது பற்றெனின் உற்றது வீடு'' என்னும் திருவாய் மொழிப் பாசுரத்தை மேற்கோள் காட்டுவதால் திருவள்ளுவர் வைணவர் எனத் துணிவதற்குத் துணையாகின்றது என்று உரைக்கின்றார்.

''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்'' இக்குறளுக்குச் சாக்ரடீசை உதாரணமாகத் தற்கால உரையாசிரியர் ஒருவர் எடுத்துக் காட்டுகின்றார் என்று வைத்துக் கொள்ளு வோம். இவ்வுரையாசிரியருக்குப் பின்னர் வரும் தலைமுறையினர், இவ்வுரையாசிரியர் கிரேக்க நாட்டில் வாழ்ந்த சாக்ரடீசை உதாரணங் காட்டி யிருப்பதால், திருவள்ளுவரும் சாக்ரடீஸ் கைக் கொண்ட சமயத்தைச் சார்ந்தவரே என்று கூறினால், எவ்வளவு நகைப்பை விளைவிக்குமோ, அவ்வளவு நகைப்பை விளைவிக்கிறது. திருவள்ளுவர் வைணவரே என்பதற்குக் காட்டப்பட்ட இம் மூன்றாவது காரணம். ★ (தொடரும்)

விற்பனையாளர்க்கு...

இம்மாத முடிவுக்குள் பழைய பட்டியல் பாக்கி அனுப்பாதவர்களுக்குச் சனவரி முதல் குயில் அனுப்புவது நிறுத்தப்படுவதுடன், அவர்கள்மேல தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அமைச்சர்.

கூடிக் கிளர்ந்தெழுவோம்!

கடலூர், வி. கு. இராமசாமி

வடவர்க் கடிமை தென்னவர் என்றால்
வையம் நகைக் காதோ!
முடவர்க் கடிமை மிடுக்கர் என்றால்
முறை சிரிக் காதோ!
திடமுடையவர் மூவே ந்தர்கள்
செவ்வனம் காத்த தமிழ்,
இடர்படும்படி இந்தி நுழைந்தால்
எப்படி நாம்பொறுப் போம்?

கேடுகாலம் தோன்றி விட்டதா
கெட்ட வடக்கருக்கே
நாடுகொள்வதும் சுரண்டி வாழ்வதும்
நல்ல செயலாமோ!
வாடாததமிழ் நாடு வாழ
வாழ்வு செழித் தோங்கக்
கோடா மல்மனம், குன்றாதொற்றுமை
கொண்டு கிளர்ந் தெழுவோம்.

★○★

ஏனோ இந்தி?

ம. க. அன்பெழிலன், மதுரை.

மலைதோன்றி மண்தோன்றாக் காலந் தொட்டே
மிகுந்துவரும் இலக்கியங்கள் மிளிரச் செய்து
கலைபோற்றிக் கவின்கூட்டி இலக்க ணங்கள்
கண்டுவந்த களிதமிழன் வாழும் நாட்டில்
நிலையான நூலெதுவும் இல்லா தின்று
நமையெதிர்த்து நலன்மாய்த்து வீயச் செய்ய
அலைபோன்றே அல்லல்கள் ஆக்கும் இந்தி
அடிவைத்தால் அழித்துவிடு! இந்தி ஏனோ!

அலைகடலின் அகல்வாய்க்கே இரையா காமல்
அதையெதிர்த்து மீண்டதுவும் வடவர் வீசும்
வலைவாய்க்குத் தப்பியதும் வானைப் போன்றே
விரிந்தபுகழ்த் தமிழ்மொழியே! அதனை இன்று
தொலைத்துவிட இந்திப்பேய் நண்ணும் என்றால்
துச்சமடா எம்முயிர்தான் என்றே கூவிக்
கொலைவாளைத் தூக்கியெழுந் தழிப்போம் எங்கள்
கலைத்தமிழே நீயிருக்க, ஏனோ இந்தி?

<○>

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.

குயில்

Regd. No. M. 7030.

ஆட்பட்டிருப்பது வெட்கம்!

இசை : காபி. தாளம் : ஆதி.

மிடிமையே கொடுக்கும் குடிமையே கெடுக்கும்
அடிமை வாழ்வும் ஒருவாழ்வா ? — நம்
கொடிய தளை அறுக்க உரிமைக் கொடிபறக்க
கூடிப் படை எடுத்தல் தாழ்வா ?

படிமன்னர் தொழும் மூன்று முடிமன்னர் வழிவந்தோம்
பழிமன்ன வாழ்ந்திட லாமா ? — நாம்
தொடுத்தது போர்! பகை தொலைந்தது பார்என்று
சொல்லிட இரண்டு நாள் ஆமா ?

ஒருகுடி ஓரினம்! ஒருமொழி கொண்டவர்
ஒன்றுபட் டார் என்ற பேச்சு — நேர்
திருவி லாப்பகைவர் செவியினில் வீழட்டும்
தீர்ந்து போகும் அவர் மூச்சு.

உருவற்றுப் போகட்டும் தமிழினம் என்றென்றே
ஓயா துழைக்கும்ஒரு கோட்டி — அதன்
கருவற்றுப் போம்படி செய்வோம் நமக்குள்ள
கைகள் எட்டுக்கோடி ஈட்டி.

ஆளாக வந்தவர் ஆள்வதும் ஆண்டவர்
ஆட்பட் டிருப்பதும் வெட்கம் — மறத்
தோளாய் இருந்தவை தோலா யினஎன்று
சொன்னால்இவ் வையம் சி ரிக்கும்.

தூளாய்ப் பறந்திடும் வஞ்ச நெடுங்குன்றம்
தூங்கும் தமிழர்வி ழித்தால் — பின்
ஆளப்பி றந்தவர் ஆளுகின்று ரென
அறிவோர் வரைவார்எ ழுத்தால்.

வாழ்க்கையி லோர் சுவை, வையத்தி லோர்புகழ் !
வாரி ரோதமிழ்ச்சிங் கங்காள் ! — வெங்
திக்காட்டில் வாழ்கின்ற செந்தமிழ் நாட்டன்னை
மீட்க நமையழைக் கின்றாள் !

வீழ்ச்சி அறிந்ததில்லை வேங்கைக ளேஎழுவீர்
வீரம் நமைப்பிரிந்த தில்லை — நம்
தாய்க்கா விலங்கு ? தமிழ்க்கா துயரமிங்குத் ?
தாக்குவீர்! தீர்ந்தது தொல்லை!